# புது வாழ்வு

தோட்டத்து ஒரு மூலையில், குழந்தைகள் சிறு கற்களையும் குச்சிகளையும் மணலையும் புல்லையும் கொண்டு கட்டும் கோட்டையைப் பார்த்துக்கொண்டு நின்றேன். போர்க்களமாகத் திகழ்ந்துகொண்டிருந்த வீட்டின் உட்புறத்திற்குச் செல்லத் தயங்கினேன். உள்ளே மதனி என்னவெல்லாமோசொல்லிப் புலம்பத் தொடங்கினதுமே இப்பால் வந்துவிட்டேன். பத்து நிமிஷமாவது சென்றால்தான் மதனி ஓய்வாள் போலும்!

“அத்தை, நன்றாயிருக்கிறதா கோட்டை?” என்று கேட்டாள் மறுமாள் கலா. ஆறுவயதுச் சிறுவன் சேகரும், நான்கு வயதுச் சிறுமி கலாவும் கட்டும் கோட்டை எப்படி இருக்கும்? நான் முறுவலித்தவாறே “பேஷாகத்தான் இருக்கிறது!” என்றேன். “நன்றாகவே இல்லை, எனக்குத் தெரியும்!” என்று கூறிக்கொண்டேகோட்டையை ஒரு உதை உதைத்துவிட்டுச் சேகர் தானும் சிரித்து, கலாவையும் என்னையுங்கூடச் சிரிக்கவைத்துவிட்டு, கட்டிய கோட்டையின் கதியோ, என் தனிமையோ சிறிதும் பொருட்செய்யாமல் ஓடிவிட்டான்; கலாவும் ஓடிவிட்டாள்.

நான் எங்கே போக? அக்கம் பக்கத்தவர் யாரும் இன்னும் நன்றாகப் பரிச்சயமாகவில்லை. உள்ளே போகவும் கஷ்டமாயிருந்தது. மதனியின் போக்கு எனக்குப் புரியவில்லை. “கோடை விடுமுறைக்குக் கோவை உகந்த இடம்! வா இங்கே!” என மதனி பலமுறை அழைத்ததனால், நான் வந்தேன். போனவாரம்தான் வந்தேன். ஆனால், அதற்குள் மதனி இரண்டு தடவை உலகவாழ்வை வெறுத்துப் பழித்துப் பேசிவிட்டாள்!பலபேரைப்போல பொதுவில்தான் பேசுகிறாள் என்று எண்ணிக்கொள்ளலாம், என்னிடம் எத்தகைய அலட்சியமும் காட்டவில்லை என சமாதானமடையலாம். ஆனா, அண்ணாவிடம் மட்டும் பொருமலோடு பேசுவது சரியா? அவளுடைய சுமுகமான பேச்சையும் தோழமையும்தானே நாடி வந்தேன்? அப்படியிருக்க, அவள் என்னவெல்லாமோ பேசி அங்கலாய்த்தவாறு இருக்கிறாளே? அவள்தான் அழைத்தாள் எனினும் அழைப்பிற்கிணங்க வந்துவிட்டது தவறோ? நெருக்கமாக, அருகருகே தென்பட்டாலும், உண்மையிலே, வானத்துத் தாரகைகளுக்கிடையே எத்தகைய அகண்டமான இடைவெளி! அதுபோலத்தானோ மதனிக்கும் எனக்குமுள்ள தொந்தம்? ஏன் . . . அண்ணாவும் மன்னியுங்கூட இப்படித்தானோ என்றல்லவா ஐயம் எழுகிறது இப்பொழுது? அம்மம்மா! தாம்பத்திய வாழ்வு வேண்டாம் என்று முடிவுசெய்து, வேலையில் புகுந்தது எத்தனை நல்லதாய் போயிற்று!

ஆனால், வேடிக்கை இதிலேயல்லவா? கணவனிடம் கட்டுப்பட்டுக் கிடக்கவேண்டாம் என்று நான் மணம் புரியாமல் வேலையில் புகுந்தது எத்தனை நல்லதாய்ப் போயிற்று!

இளையாளாக வாழ்க்கைப்பட்டுவிட்டதனாலே மதனி இத்தகைய பொருமல் இருக்கக்கூடும்; இயற்கைதான். “நான் போய்விட்டால் உங்களுக்கு நஷ்டமா? வேறொருத்தி வந்துவிட்டுப் போகிறாள்!” என்று அடிக்கடி சொல்கிறாள்; உணர்ச்சி வசப்பட்டு விடுகிறாள். மூத்தாளிடம் இருந்திருக்கக் கூடிய பாசத்தையும் அன்பையும் எளிதிலே மூடியிட்டு மறந்து, அவள் இறந்த இரண்டே ஆண்டுகளுக்குள் இளையவளின் கைப்பிடித்துக்கொண்ட ஆண்மகனை அந்த இளையாள் பின்னே எப்படி மதிப்பாள்? ஆனால் . . . அதற்காக மதனி இத்தனை ஏசிப்பேசவேண்டாம் - அண்ணாவும் இத்தனை மரத்துப்போகவேண்டாம். தன் வாழ்விலே இவர் ஒருவர்தானே இடம் பெற முடியும் என்ற நினைப்புடன் மதனி தன் பொருமலை அடக்கவேண்டும். அண்ணாவும், “நிஜந்தான் - நீ போய்விட்டால் நான் இடிந்துபோய்விடமாட்டேன்!” என்று எப்போதாவது சொல்லத்தான் வேண்டும். கணவன் மனைவியை அடக்கியாள்வது என் கொள்கைக்கு எதிரானதுதான் - ஆனால் தூங்கா விளக்குப் போல விளங்கும் ஆண்மைக்குத் தூண்டுதல் வேண்டுமல்லவா?

பார்க்கப்போனால் மன்னி திடமாகவே இருக்கிறாள் - அண்ணாதான் நாலுமாதம் முன்பு ஆசுபத்திரியில் ஒருவாரம் இருக்க நேர்ந்தது. அப்படியிருக்க, மன்னி ஏனோ தன் உயிரைப்பற்றியும், தான் போய்விடுவதைப்பற்றியும் பேசவேண்டும்?

இங்கு வந்ததுமுதல், ஒரு வாரமாக, நானும் பார்க்கிறேன். கொத கொத வென ஜலத்தில் ஊறிப்போன சோப்புமாதிரி இருக்கும் என் நிலைமை எனக்கு வெறுப்பளிக்கிறது. பள்ளிக்குழந்தைகளின் வியாசங்களை திருத்தும் வேலை இப்பொழுது இருந்தால் தேவலைபோலத் தோன்றுகிறது! இந்தத் தோட்டம் கையகலத் தோட்டம்; இதை எத்தனை நேரம் பார்த்துக்கொண்டிருப்பேன் நான்?

அண்ணாவின் மோனம் மன்னியை மெல்ல ஓயவைத்துவிடவே, உள்ளேபோகக் கிளம்பினேன். நேரே சமையற் கட்டுக்குப் போனேன். மன்னி குமுட்டியையே வெறுத்து நோக்கிக்கொண்டிருந்தாள்.

என்னைக் கண்டதுமே மன்னி, ஒரு நொடியில் எழுந்து அருகிலிருந்த அலமாரியைத் திறந்தாள்.

“பாருடி பாமா!இப்படியெல்லாம் நடந்தால் யாரால்தான் தாங்கமுடியும்? வெள்ளிக்கிழமையும் அதுவுமாய் வெண்கலம் இப்படி உடையலாமா? சின்னக் கரண்டியா, ஸ்பூனா? பிரும்மாண்டமான பால் உருளி! டணார்னு இப்படி இரண்டாய்ப் போச்சே! வீட்டுக்கு ஆகுமாடி? கைத்தவறிப் போச்சு என்று சொல்கிறாளே வேலைக்காரி! எத்தனைதரம் விழவில்லை இந்த ஒன்பது வருஷத்திலே! இத்தனை நாள் உடையாதது இப்போ டாண்ணு போவானேன், சொல்லு! என்னவெல்லாம் நடக்கப்போகிறதோ - எனக்கு என்னமோ கேடுகாலம்தான் வந்திருக்கு! பாருடி, கையிலே வாங்கிப்பாரு! என்ன தினுசு வெண்கலம்! இது உடைந்தது முதல் வயிற்றில் சங்கடமான சங்கடமாகயில்லை!”

இப்படியே சொன்னவாறு என்னிடம் நீட்டினாள், உருளியின் உடைந்த இரு பகுதிகளை. உயிரற்ற மகவை ஏந்தி நிற்கும் அன்னையைப்போலத்தான் தீனமாக மன்னி காட்சியளித்தாள்.

“எத்தனையோ தடவை விழுந்து விழுந்து இருந்ததனால்தான் இப்போ உடைந்துவிட்டிருக்கும்; அதனால் என்ன மன்னி? சஞ்சலப்படுவானேன்? இதை உள்ளே போடு. இப்படியே வெளியே சற்று உலாவிவிட்டு வரலாம்!” என்றேன் நான். ‘வெண்கலம் உடைந்தால் அதைப் போட்டு கொஞ்சம் நஷ்டத்திலே வெறு உருளி வராதா என்ன?’ என்று கேட்கவும் தோன்றியது எனக்கு - அதை அடக்கிக்கொண்டேன். அப்படிச் சொல்லிவிட்டால், மன்னியின் பொருமலை அது வளர்த்துவிடும்! ஒரு மனைவி போனால் வேறு மனைவி - சிறிது கஷ்டத்திலே -கிடைத்துவிடுவதைக் குறிப்பதுபோலாகிவிடுமே!

ஆம் - மன்னியின் பீதியை அசட்டுத்தனம் என்று சொல்லிவிடமுடியுமா? வெண்கலம் உடைந்ததற்கும் மன்னியின் எண்ணத்தின் பீதிக்கும் எத்தனை நெருக்கம்! சிறிதே நஷ்டம் - வெண்கலத்திற்கு ஈடு கட்டலாம் - சிறிதே கஷ்டம் - மனைவிக்கும் ஈடு கட்டிவிடலாம்! அந்தோ! மங்களம் மதனி போனதுபோலவே இவளும் போய்விடுவாளோ? மீண்டும் அண்ணா . . .. சட்! என்ன ஜன்மம்! புருஷ ஜன்மமும் கூடாது, பெண் ஜன்மமும் கூடாது! ஏ உலகமே! நீ ஏன் இப்படி இருக்கிறாய்?

எனக்கு திடீரென்று அண்ணாவின்மேல் அதிருப்தியும் மதனிமேல் கனிவும் தோன்றின! “வேறு புடவை மாற்றிக்கொள் மன்னி! நான் பூத்தொடுத்துக்கொண்டு வருகிறேன்!” என்று சொல்லிவிட்டு தோட்டத்திற்கு வந்தேன்; என் மனம் குழம்பிவிட்டது. கணவனைக் கொள்ளாமலேயே வாழத்துணிந்த நான், நார் இன்றியே பூவைத்தொடுத்துக்கொண்டு வருகையிலே என் எண்ணங்களும், உணர்ச்சிகளும் மட்டும் பலவாறு சிதறிவிட்டன.

நாங்கள் இருவரும் அக்கம்பக்கம் எங்கும் போகாமல் கோவிலுக்குப் போனோம். யாருக்காகவோ குங்குமார்ச்சனை செய்துகொண்டிருந்த குருக்கள், வெகு அழகாக நாமாவளிகளைச் சொல்வதை நான் கவனித்துக்கொண்டிருந்தேன்; ஒரு தடவை மன்னியின் பக்கம் திரும்பிப்பார்த்தேன். ஆச்சரியம்! அவள் கண்களிலே நீர் துளும்பி நின்றது! நாலுநாள் முன்பு வந்தபோது மன்னி மனமுருகிச் சன்னிதியில் நின்றாளேயன்றி, இவ்வாறு கண்ணீருடன் காட்சி அளிக்கவில்லை. இன்று ஏன் இந்த கண்ணீர்? வெண்கலம் உடைந்துவிட்டதனால் ஏற்பட்ட பீதியா? ஆம், அப்படித்தான் இருக்கவேண்டும்.

கோயிலிலிருந்து வீடு திரும்பும் வழியிலே நான் மன்னியை விளித்து வினவிவிட்டேன்.

“என்னவென்று வேண்டிக்கொண்டு அப்படி கண்ணீர் மல்கி நின்றாய்?” என்று கேட்டேன். “என்னவென்று வேண்டிக்கொள்வது? ‘சுவாமி, என்னைக் காப்பாற்று!’ என்றுதான் பிரார்த்துக்கொண்டேன்!” என்று பதிலளித்தாள் மன்னி!

இரண்டே நாட்களுக்குள் மீண்டும் ஒரு மனக் கலக்கம் வீட்டிலே எல்லோருக்கும் ஏற்பட்டது! மேயச் சென்ற பசுமாடு வீட்டிற்கு திரும்பி வரவில்லை. காலையில் மேயச்சென்ற பசு மாலையில் கழுத்து மணி ஒலிக்க வராததுகண்டு கலங்கினாள் மன்னி. “நாளைக்கு வந்துவிடும்” என்று தைரியமூட்டிக்கொண்டிருந்தேன். ஆனால் இரண்டு நாள் கழித்து பசுவின் கதி தெரிந்துவிட்டது. மன்னி வாய்விட்டுப் புலம்பி அழுதுவிட்டாள். “என் வயிற்றை என்னமோ பண்ணுகிறதே!” எனத் துடித்த மன்னியை எப்படிச் சமாதானபடுத்துவதென்று தெரியாமல் திண்டாடினேன். சகுனங்களாலும், சூசனைகளாலும் மனதை அலைமோதச் செய்யக்கூடாது என்று நான் போதித்தேன் - ஆனால் அமங்கலமான சம்பவங்கள் நடப்பதனால் மன்னி மருண்டதைத் தவிர்க்க என்னாலாகவில்லை. என் உள்ளம் கூட, நடப்பவை அமங்கலமானவை என்றுதான் லேசாக எண்ணமிட்டது!

விடுமுறையில் கால்பகுதிதான் கழிந்தது எனினும் பலநாளாகி விட்டதுபோலத் தோன்றியது! இன்னும் முக்கால்பகுதி விடுமுறையை நான் சாரமற்ற முறையிலே கழிக்க விரும்பவில்லை. ஒரு சந்தர்ப்பம் வந்தது. பழைய வகுப்பைவிட்டுப் புதுவகுப்புக்குத் தேர்ச்சிபெற்றுப் போகும்பொழுது ஏற்படக்கூடிய மகிழ்ச்சியையும் மிஞ்சிவிட்டது இப்போது எனக்கு ஏற்பட்ட ஆறுதலான உவகை. வழக்கம்போல் பெரியண்ணாவிடம் போகவும், இந்தப் புது இடத்தை விட்டுக் கிளம்பவும் சந்தர்ப்பம் ஏற்படவே, உற்சாகமுடன் கிளம்பிவிட்டேன். மன்னியின் கவலைப் பல்லவிகளை, ராகம் தானம் பல்லவிகளால ரசிக்க என்னால் இயலவில்லையே! இரண்டுமாதம் தங்கவந்தவள் இருபது நாள்கூடத் தாங்காது கிளம்பிவிட்டேனே என்று அண்ணாவுக்கும் மதனிக்கும் வருத்தம்தான். கிளம்பும் சமயம் எனக்கும் யோசனைதான்! வீட்டிற்கு லட்சுமிபோன்ற நாத்தனார் நான் இத்தனை நாளும் மனம் மகிழ்ந்திராமல் திடுதிப்பென்று புறப்பட்டுவிட்டேனே? இது இவர்களுக்கு நல்லதல்லவோ? நான் செய்வது அவர்களுக்கு ஆகாதோ என்று ஒரு கவலை வந்தது! கடவுளை வேண்டிக்கொண்டேன் - அண்ணா மன்னியிடம் விடைபெற்றுக்கொண்டேன்.

விடுமுறையின் மீதிப் பகுதியைப் பெரியண்ணாவிடம் கழித்துவிட்டு, பள்ளி திறக்கும் சமயம் என் இடம் வந்துசேர்ந்தேன். ஒருநாள் பாபர் பாதுஷா, மைந்தன் ஹுமயூனுக்காக உயிர்த்தியாகம் செய்த அற்புதம் பற்றி வகுப்பில் போதித்தேன்.

“எல்லோருக்கும் உயிர் வெல்லம் என்று சொல்வார்கள் - ஆனால் எனக்கென்னமோ வேறுவிதமாகத் தோன்றுகிறது! நாம் இறந்து போனாலும் தேவலை - பிறர் இறப்பதைப் பார்ப்பதுதான் சிரமம்போல எனக்குப் படிகிறது! சாவு கிட்டிமுட்டி வரும்பொழுதுதான் அவரவர் உயிர் அவரவர்க்கு வெல்லமாக இருக்குமோ என்னவோ? இல்லையா?”என்று ஒரு கேள்வியைக் கேட்பதுபோல என் சொந்த எண்ணங்களை நான் வகுப்பிலே வெளியிட்டுக்கொண்டேன். அந்தச் சமயம், வானவீதியில் எங்கோ தென்படும் ஒற்றை நட்சத்திரம்போல மன்னியின் முகம், என் உள்ளத்திலே தோன்றியது. “நீ மட்டும் தனிப்பிறவி, மன்னி! உன்

உயிரைப்பற்றி உனக்குக் கவலை! இது உனக்கு அழகல்ல! நீ போய்விட்டால், அண்ணா பிறகு மறுமணம் செய்துகொண்டால் என்ன, செய்துகொள்ளாவிட்டால் என்ன? உன்னை என்ன செய்துவிடமுடியும் அண்ணாவின் மறுவாழ்வு?" என்று கேட்டுக் கண் சிமிட்டி விஷமப் புன்னகைச் செய்யும் எதிர் தாரகைபோல, என் முகமும் ஒரு கோடியிலே தென்பட்டது! சிமிட்டலும் மினுக்கலும் இன்றி நின்று ஒளி வீசும் கிரகம்போல அண்ணாவின் முகமும் தோன்றவிருந்தது!

திடீரென்று வானம் நிலை பெயர்ந்தது! ஆம் - என் உள்ளம் கவிழ்ந்துவிட்டது! என் மன்னி - நான் மூன்றுமாதம் முன்பு பார்த்த மன்னி - உயிர் நீத்து, பூவுடல் உதிர்த்து மறைந்துவிட்டாள். "மன்னி! உன் பீதியே உன்னைக் கொன்றுவிட்டதே! பயந்து பயந்து சாகிறேன் என்று நீ சொல்லிக்கொண்டு இருந்தது, பலித்துவிட்டதே!" என்றெல்லாம்தான் அழுது ஓய்ந்தேன் செய்தி கேட்டதும்.

அண்ணாவுக்கு ஆறுதல் சொல்ல நேரிலே போக வசதியுமில்லை, மனமுமில்லை எனக்கு. அண்ணாவின் துயரத்தை நானும் குறைவாகவே மதித்தேன் இப்போது. எனினும் தாற்காலிகமாகவேனும் அண்ணா துயருற்றுத்தானே இருப்பார்? ஒரு கடிதம் எழுதிப்போட்டேன்.

"அண்ணா! மதனி பேசியதெல்லாம் நினைவுக்கு வந்து என்னை வருத்தத்தில் ஆழ்த்துகிறது! தன்னுடைய அந்திய காலத்தை அவள் எப்படி முன்கூட்டி அறிந்திருந்தாள் என்பதை எண்ணிப் பார்க்கப் பார்க்க விந்தையாகிறது! அவள் ஸ்தானத்திலே வேறொருத்தி வருவது தகாது என்றே நான் எண்ணுகிறேன்!" என்று எழுதினேன் கூசாமல்.

மறு தபாலிலேயே அண்ணா பதிலளித்துவிட்டார்.

"இவள் ஸ்தானத்திலே இனி எவள் வரமுடியும், பாமா? என் உயிருக்காகத் தன்னுயிரைத் தந்தவள் உன் அண்ணி. நீ நினைப்பதுபோல அவள் தன் உயிரைப் பற்றிக் கவலைப்படவில்லை. தனக்கு அமங்கலித்தனம் வந்துவிடுமோ என்றுதான் அவள் வெருண்டுவந்தாள்; என் உயிரைப் பற்றித்தான் அவள் கவலைப்பட்டு வந்தாள்! பயந்து பயந்தே மாய்ந்துபோனாள். இளையாளாக வாழ்க்கைப்பட்டு விட்டதனால்தான் போலும் அவள் விதவைக்கோலம் தனக்குத் தவிர்க்கமுடியாதது என அஞ்சினாள்! 'உங்களுக்காகிலும் மறு வாழ்வு உண்டு - எனக்கு வேறுகதி ஏது?' என்பதுதான் அவளுடைய வார்த்தைகள் கொண்ட மறைபொருள். நான் நோயுற்று ஆஸ்பத்திரியை நாட நேர்ந்தது முதலே அவளுக்கு பீதி! கவலை! அதற்கேற்றாப்போல வீட்டிலும் அமங்கல சூசனைகள்!

அவளுடைய அன்பு போர்த்தியிருந்தது முரட்டுப் போர்வை - பிறர் கண்களுக்கு. எனக்குத் தெரியும் அந்த முரட்டுப் பார்வை கதராடைபோல என்று! என்பொருட்டே அவள் வேதனைப் பேச்சு பேசுகிறாள் என்பதை அறிந்த நான், அவளைக் கண்டிக்கவும் முடியாமல் திண்டாடினேன். பாவம், அவள் என் உயிரின்பொருட்டு ஏங்கி ஏங்கித்தான் மடிந்தாள். ஒருநாள் வீட்டுத் தென்னைமரம் ஒன்றின்மீது இடி விழுந்தது. அந்த அமங்கல சூசனை கண்டு இடிந்ததுபோல் காய்ச்சலில் படுத்தவள்தான்!"

அண்ணாவின் கடிதம் இதுதான்!

மணம் புரியாத நான் - மணவாழ்க்கையை அறியாத நான், அண்ணா மன்னியிடை நிலவியிருந்த இல்லற அன்பின் உருவத்தை, இத்தனை நாளும் உள்ளது உள்ளபடி அறியாது போனேன்! அண்ணனின் மோனத்திலிருந்த கனிவையும், அண்ணியின் பொருமல்களின் உண்மைப் பொருளையும் காணாமற்போனேன்!

பள்ளிக்கூடத்து வராந்தாவின் கோடியிலே ஒரு பெண் கையிலே 'ஸ்கிப்பிங்க்' கயிறுடன் விளையாடக் கிளம்பிக்கொண்டே சரித்திர பாடம் பற்றி பேசும் அதிசயத்தைக் கவனித்தேன். பாபர், தன் மகன் நோயினிறு

பிழைத்தெழ வேண்டுமென்று தன் உயிரைக் கொடுத்த அதிசயம் நிகழ்ந்திருக்குமா என்பது அவள் கேள்வி! என் அருமை மன்னி நிகழ்த்திச்சென்ற அற்புதத்தைக் கூறிவிட்டு நானும் அமைதியடைய விரும்பினேன். ஆனால், அந்தத் துடிப்பு அடங்கியது. புது வாழ்வும் இல்லற அன்பும் தேவை என்று என்னுடைய வைராக்கிய மனம் நெகிழ்ந்துவிட்டதை நான் அறிந்ததும், வரவிருக்கும் வாழ்க்கைத் துணைவரிடம் சகலமும் சொல்லி மனம் ஆறிவிடும் துடிப்புப்பெற்றேன்.

**********

(சுதேசமித்திரன், ஏப்ரல் 8, 1951)